# பிரஜானுகூலன்.

ஸர்வமும் ஈஸ்வராக்ஞை.

பருவம் 1. } 1905-௵ ஜனவரி-௴. { இலக்கம் 10.

## கல்வியும் நடக்கையும்.

அதிக கல்வியுள்ளவர்கள் அதிக குணவான்களாக இருக்கவேண்டும். இப்படி இராமல் அநேக விதத்தில் மிகப் பொல்லாதவர்களாயிருக்கிறார்கள். தங்கள் ஹிருதயத்தைச் சுத்தி செய்யவும், ஆசாபாசங்களை யடக்கவும் தாங்கள் கற்ற கல்வியைப் பிரயோகிக்காமல் புகழ்ச்சி தேடவும், சூது செய்து மோசம் பண்ணவும் பிரயோகிக்கிறார்கள். அதை வீண் பெருமைக்கும், பொல்லாங்குகளுக்கும் உபயோகிக்கிறார்களல்லாது தங்களைச் சரியானவழியில் நடத்த உபயோகிக்கிறதில்லை. ஒருவனுடைய குணத்தை அவனுக்கிருக்கும் புத்தியைக்கொண்டுங் கருத்தைக்கொண்டுந் தீர்மானிக்க நம்மாலொருபோதுங் கூடாது. ஒன்றை நினைத்து மற்றொன்றைச் செய்வதைவிட மனிதருக்கு அதிக வழக்கமொன்றுமில்லை. தங்களுக்கிருக்கும புத்தியினால் யோக்கியமான காரியங்களைப் பேசினபோதிலும், இழிவான குணத்தினால் அயோக்கியமான காரியங்களைச்செய்கிறார்கள். நற்கல்விகளையடைந்து உயர்ந்தஉத்தியோகங்களைச்செய்கிறவர்கள் மெத்தக் கெட்டவர்களாயும் அயோக்கியர்களாயுமிருக்கிறதை பல சமயங்களிலும் காண்கிறோம். ஆகையால் உள்ளத்தில் அணுவத்தனை மெய்யானசுகுணமில்லாமல் நமதுபுத்தியில் மாத்திரம் சகல கல்வியும், விசுவாசமும் உண்டாயிருக்கலாமென்பது மறுக்கக்கூடாத நிச்சயமே. இப்படிப் பெரும்பாலும் கல்வி யொருவழியும், செய்கை யொருவழியுமா யாவதற்கு நம்மிடத்திலுள்ளஒவ்வோரிச்சையும் காரணமாகி அது நம்மை யக்கல்விக்கு விரோதமாக நடக்கச் செய்கின்றது. இதனால் நமது பத்தி யொருவழியும, இச்சை யொருவழியுமாய் நம்மை நடத்துகின்றன. நியாயமானது பக்தியோடுங்கிரமத்தோடும நடக்கச்சொல்ல; மூடவிச்சையும், லோக மயக்கமும் நம்மை பத்தியற்ற துன்மார்க்கத்தில் செல்விக்கின்றன. இவ்விதமாக அந்த துன்மார்க்கமே நம்மிடத்திற் குடிகொள்ள நாமும் கெட்டு நமது வித்தையும் உபயோகமற்று நமது வாழ்நாள் அவ்வித்தைக்கும் நடத்தைக்கு மொவ்வாமையாகின்றது. நமது கடமையை நமக்குத்தெரிவித்திருப்பது அதின்படி நடப்பதற்கே யொழிய வேறல்ல. நடக்கையே சகலத்திற்கும முக்கியம். இல்லாவிட்டால் நாம் கற்றும் காரியமில்லை. கல்வியும் சாமர்த்தியமு முடையவர்களை யவைகள் மற்றோரைப்பார்க்கிலும் குணவான்களாக்காவிட்டால் அவைகளால் அவர்களுக்கு உபயோகமில்லை. புத்தியுங் கல்வியும் குணத்தோடிசைதலே உள்ளபடி அவைகளைப் பூஷணமாக்கிப் புகழச்செய்யும். தகுந்த நடக்கையை யொத்திராத கல்வியானது தன் பயனையே யழிக்கின்றது. மேலும் அது பழுது பட்டு வீணாய்ப் பிரயோஜனமில்லா

மற்போகின்றது. நாம் கற்றவர்களாகப் பிரகாசமும் பெருங்கீர்த்தியும் அடைந்திருந்தாலும் மெய்யான யோக்கியதை யொன்றுமில்லாதிருப்போம். உள்ளத்திலிருக்கு மொருசுகுணமானது மாப்பிரகாசமான புத்தியைப் பார்க்கிலும் மிகச்சிரேஷ்டமாம். ஹிருதயத்திலுள்ள ஒரு நற்குணமானது புத்தியிலடங்கிய அருமையான அனந்தமாயிரஞ் சாஸ்திரங்களைவிட மேலானதாம். நாம் அருமையான சாமர்த்தியத்தைக் கண்டு எளிதாகப் பிரமித்து அப்புத்தியைத் தகாதவிதமாய் மதிக்கிறோம். ஆனால் ஹிருதயத்தின் குணங்களுக்கு முன்னே புத்தியின் குணங்கள் அதிசயத்திற்குப் பாத்திரமல்ல. சுகுணமொன்றே யுள்ளபடி என்னாளும் மேன்மையும் அதிசயமுமுள்ளது. இதனாலேயே மற்ற குணங்களனைத்தும் மேன்மைபெறும். கல்வியில் உண்மையாகவேஒரு மேன்பாடுண்டு. ஆயினும் அது கல்வியும் நடக்கையும் சம்பந்தப்பட்டாலொழிய சிறப்புறாது. அன்றியும் அந்தக்கலவியில் ஒரு பெருமையுமுண்டு. அப்படியிருந்தாலும அந்தக் கல்வி சுகுணத்தைத் தழுவியதாயிராவிடில் அந்தப் பெருமை பைசாசுக்குரியதே யல்லாதுவேறல்ல. கல்வியானது அருமையும் பெருமையும்உள்ளதாயினும், அதன்பெருமையடங்கியிருப்பது உபயோகத்திற்கான வழிபாடுந்திறமும் நமக்களிப்பதிலல்லாது மற்றதிலல்ல. நற்காரியங்களைச் செய்ய அவசியம் கொஞ்சம் கல்வி வேண்டியதே. ஒருவனுக்கது எவ்வளவு அதிகமாயிருககுமோ அவ்வளவு அதிகமாய் அந்த நன்மைக்குரிய காரியங்களைப் பரிபாலனம் பண்ணவும் அதனால் சௌக்கியத்தையடையவும் வல்லவனாயிருப்பான், இந்தக் காரணத்தைப்பற்றி மனிதனுடைய சகல மேன்பாட்டிற்கும் அந்தக்கல்வியே அஸ்திவாரமென்றெண்ணப் படுகின்றது. அதைக் கூடியமட்டும் சம்பாதிப்பது நமக்குக் கடமையாயிருக்க வேண்டியதுமன்றி அதைக்கொண்டு நாம் செய்யும் காரியங்களால் அதை நல்ல பொருளென்று எண்ணச் செய்யவும் வேண்டியது. அதை நாம் உபயோகப்படுத்தும் வகைக்குத் தக்கபடிதான் அது நமக்குச் சிறப்பும் இழிவும் உண்டாக்கும். தகுந்த நடக்கையோடு கூடிய கிஞ்சித்து வித்தையானது துர்விஷயத்தில் செலுத்தப்பட்ட உயர்ந்த வித்தையைப் பார்க்கிலும் அதிக மேன்மை பெற்றிருக்கிறது. உலகத்திலே மிகப் புத்திசாலியும் கல்விமானுமிருந்து, செருவமும் துற்குணமும் பொறுமையும் உள்ளவனாய் இருப்பதைப் பார்க்கிலும், அதிக மூடனாயிருந்து சுகுணமுடையவனாயிருப்பது மிகவும் உத்தமம். நடக்கைக்குச் சரியாக ஒத்திராத கல்வி பிரயோஜனமற்றதா யிருப்பதுமன்றிக் கெட்டதாயும் பொல்லாததாயு மிருக்கின்றது. அது குற்றத்தையே பெரிதாக்கி நம்மையதிக இழிவும் அசங்கியமும் படுத்திவிக்கின்றது. மேலும் நம்மை சுகப்படுத்தஉதவாமல் சஞ்சலமும்சாபனையுமாக்கி நம்மையதிகமாய்க் கெடுத்துவிடும். கற்றுணர்ந்தவன் இழிவும் அபத்தமும் பொருளிச்சையுமுள்ளவனாயிருப்பானாகில் அவ்வளவுக்கும் அதிக நிஷேதமு மருவெருப்புமடைவான். உயர்ந்த கல்வியோடு துர்நடக்கை சேர்ந்தால் ஒன்றுக்கொன்று எப்போது மொவ்வாமையாயிருப்பதுமன்றி அது அசங்கியத்தையும் கனக்குறைச்சலையும் அதிகரிப்பிக்கின்றது. ஒருவனெவ்வளவுக்கதிகமாய் கற்றிருப்பானோ அவ்வளக்கு அதிகமாய் நன்மார்க்கத்தின் கனத்தை யறியவேண்டியது.

(இன்னும் வரும்.)

## பெண் கல்விக்குள்ள பிணி.

நம் நாட்டில் பாடசாலைகளிற் பத்து அல்லது பதினோராண்டளவும் கல்விபயிலும் சிறுமிகள் அம்மட்டோடு தங்கள்கடமையைக் கட்டிவைத்து விடுவ

தால் அடையும் பயனைச் சிறிது யோசிப்போம். அவர்கள் அறிவு முதிர்ந்து கல்வியினால் தமக்குப் பிற்காலத்திலுண்டாகக் கூடிய உபயோகங்களையும் அவசியத்தினையும் சரிவர உணர்ந்து அதிற் கவனம் செலுத்தும் ஆவலையும் ஊக்கத்தையும் அடையச் சாதாரணமாய் 12அல்லது 13வயது செல்லுகின்றது. தாகமெழுகையில் தண்ணீர்ப் பாத்திரம் தவறிவிழுவதுபோல் அத்தகைய நல்ல தருணத்தில் கல்விப் பயிற்சியும் தடைப்படுகின்றது. அதிக சூட்சுமபுத்தியும் சுறு சுறுப்பு முள்ள சில பெண்களைத் தவிர சாமான்ய புத்தியையுடைய பல பெண்கள் தாங்கள் இயற்கையாகவும் அவசியமாகவும் அறிந்திருக்கவேண்டிய வீட்டு வேலைகளையும் குடும்பநிர்வாக முறைமையையும் செம்மை பெறத் தெரிந்துகொள்ள வெகு சிரமப்படுகின்றனர். இந்த நிலைமையிற்றானே இவர்கள் புருஷன் வீட்டுப் புதுக்குடும்பத்திற் கனுப்பப் படவேண்டியவர்களாய்ப் பருவமடைகின்றனர். அந்தத் தடை கடந்தால் அதன்பின் இவர்கட்கு நம்நாட்டு அயுக்தமான இடைக்காலவழக்கப்படித் தாய் வீட்டில் தாமதிக்க சுதந்திரங் கிடையாமற்போகின்றது. கல்விச் சாலைகளில் அப்பியஸிக்கும் மாணாக்கர்கட்கும் தங்கள் வகுப்பிற்குரிய பாகங்களிற்றானும் தேர்ச்சியடைந்து பரிசீலனைக்குட்பட 1 அல்லது 2 என்கிற வருஷத்தவணைகள் உண்டு. கோர்ட்டில் தீர்ப்பளிக்கப்பெற்ற கடன்காரனுக்கும் அவன் தொகையைச்செலுத்த கெடுவு இவ்வளவுகாலமென்று அறியச் சவுகரியமுண்டு. அத்தன்மையும் இதுவிஷயத்தில் நம்பாலிகைகட்கு வாய்த்திராதது எவ்வளவு அயுக்தம்? ஆகவே தாய்வீட்டில் உள்ள பெரியோர் இப்பெண்கள் புருஷன் வீட்டில் சமர்த்தியாக நிர்வகிக்கவேண்டிய கடைமைகளையும் முறைமைகளையும் இன்னின்னவென பன்னிப் பன்னிப் போதிக்கவும் பயிற்றவும் தாராளமான அவகாசம கிடைப்பதில்லை. இடையிற்றானே புருஷன் வீட்டிலிருந்து வாயுதாவுள்ளதாகவோ அதுவுமின்றியோ முகூர்த்த பத்திரிகையாகிற நோட்டீஸ் கிடைத்துவிடுகிறது. இத்தருணத்தில் நமசிறுமிகள் அதி அவசியமான குடும்ப தர்மப்பயிற்சியிலும் பாண்டித்தியமின்றி அதியுபயோகமான கல்விப்பயிற்சியிலும் குறைவுற்று புக்ககத்தினராலும் பிறராலும் பல சமையங்களில் இகழவும் கடியவும் பாத்திரமாகி உற்சாகங்குறைந்து துன்புறுகின்றனர். புக்ககத்தில் நிர்ப்பந்தங்கள் தற்காலம் அநேகமாய் நீங்கிவிட்டதாயினும இந்துதேச மாதர்களின் தொன்மையியல்பிற்குத்தக்கவாறு திறமையுடனும் சாதுரியவிநயங்களுடனும் திருப்தியுண்டாக நடந்து தம்பதி நேசத்தை விர்த்திசெய்துக்கொள்ளவும் புக்ககத்து முதியோருக்குப் பணிவாகவும் அடக்கமாகவும் ஒழுகவும் 15 வயதிற்கு முன் ஒருநாளும் நம்பெண்கள் யோக்கியர்களாகமுடியாது. அப்படியாகும்படி கட்டாயப்படுததுவது தர்மமுமல்ல. இதுவுமன்றி மேற்கண்ட வயதிற்குள் ஒன்றிரண்டு பிராயங்கட்கும் இவர்கள் உட்பட்டவர்களாகச் சிலவீடங்களில் சம்பவிக்கின்றது. இதுவும் நேர்ந்துவிட்டால் பிறகு இவர்கள் முன்னர்விட்ட கல்வியைய விர்த்திசெய்துகொள்ள எந்தச்சந்துவழிபார்த்தாலும் இடமில்லையென்பது தெரிந்த விஷயமே. இவ்வாறு தெய்வகதியால் தாய்மார்களாகாமல் தப்பியிருக்கும் இதரபெண்களில் அபூர்வமாய் இரண்டொருவர்க்குமட்டில் புருஷன் வீட்டில அப்புருஷனாலேயே இவர்கள் கல்வி அபிவிர்த்திக்குத் தகக சாதனங்கள் கிடைத்திருப்பது இப் புதுநாகரீக உணர்ச்சியின் பயனாய் உண்டெனினும் அதில் பலவித ஒழுங்கீனங்களும் விளைகின்றதுடன் போதிய பலனும் துரிதவிர்த்தியும் உண்டாவதரிதாகின்றது.

(இன்னும் வரும்.)

அசலாம்பிகை அம்மாள்.

## உலக வாழ்க்கையில் உண்டாகும் இன்பம் பூரண இன்பமல்ல.

(முன் தொடர்ச்சி.)

2. அனுபவிக்குந் திறமின்றி அதிர்ப்தியடைந்து மனக்குறைப்படுவது:— நாம் இடைவிடாது முயன்று எவ்வகையான இடையூறுகள் சம்பவித்தாலும் அவைகளுக்குச் சிறிதும் அஞ்சாமல் அதிக ஜாக்கிரதையாயிருந்து நம் முயற்சியின்பயனை அடைகிறோம். அடைந்தும் பிரயோசனமென்ன? ரம்மியமுண்டாகிறதா? நாம் அபேட்சித்த பொருள் அகப்பட்டதென்று திர்ப்தியடைந்து ஆறித்தேறி, இனி நமக்கு யாதுங் குறைவில்லையென்று எண்ணிப்பூரண சந்தோஷமுள்ளவராகிறோமா? இல்லையில்லை. எந்த ஸ்திதியிலிருப்பவர்களும் தாம் தேடும் பொருள் சித்திக்குமானால், நம்மைப் போலொத்த பாக்கியவந்தர் ஒருவருமில்லையென்று நினைப்பதும், இன்றேல் மனக்குறைகொண்டு விசாரப்படுவதும் இயற்கையே. நாம் கொண்டகருமம் சிதறினாலும் துக்கம், சித்தித்தாலும் துக்கமே. கல்விப்பொருள் செல்வப்பொருள் இரண்டையும் கூடியவரையில் குறைவறப்பெற்று பிரதாபமுடையவர்களாயிருக்கும் பெரியோர்களும் தமக்குப் பின்னும் பொருள் வேண்டுமென்று கருதி விசனப்படுகிறார்கள். செயலற்ற சோம்பேறிகளோ தமக்கும் யாதேனும் ஒரு முயற்சி வேண்டுமென்றுகருதுவார்கள். சாதாரண ஸ்திதியிலிருப்பவர்களும் அதிக தனமும் கனமும் பெறுவதற்கு வகை தேடுவார்கள். உயர்ந்த உத்தியோகஞ்செய்து மிகுந்த வருமானம் பெறுகிறவர்கள் ஒருவருக்குதன் அடங்கியிருந்து வருந்தாமல் சுயாதீனம்பெற்றுச் சுகித்திருப்பது எத்தனை பாக்கியமென்று நினைத்துப் பெருமூச்செறிவார்கள். இப்படியே ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைத் தேடி அடைந்த பின்னும் அதினால் உண்டாகும் இன்பத்தைத் துன்பமாகக்கொண்டு மற்றொன்று பூரண இன்பம் பயக்குமென்று கருதிப்பிரயாசைப்பட்டு அதைத்தேடித் சிரிந்துமனக்குறைப்பட்டுவிசனமுறுவார்கள். உள்ளத்தில் கொண்ட ஒருகுறை நீங்க. மற்றொரு குறைஉண்டாகிறது. ஆகவே பூரண இன்பம் பெற்று சுகித்திருந்தவர்கள் ஒருவருமில்லை.

இம்மைககுரிய விஷயங்களில், மானிடர்களுக்கு உண்டாகும் இன்பம் எவ்விதத்திலும் சாஸ்வதமல்ல. வர்ணமிட்ட சித்திரப்பதுமைபோல வசீகர சக்தியாயுள்ளதாகத் தூரத்தில் தோன்றும் இன்பப் பொருள்கள் அனுபவத்தில் வரும்போது அதன் அழகு குன்றி விகாரமாகி வெறுப்புத் தருகின்றது. நிழலைப் பொருளென்றும் நீர்க்குமிழியை நிலையென்றும் கொள்பவர்போல, மன்பதைகள் இம்மாயத் தோற்றத்தை மெய்யென்றெண்ணி தமது ஆவலின் வசத்தராகி தம்மாலாகத்தக்க முயற்சிகள் அனைத்தையும் செய்து அப்பொருள் தேடிக் கிட்டியவுடன் அவர்கள் ஆசையானது அப்பொருளைவிட்டு மற்றொன்றைத்தாவ முன் தேடிய பொருளும் கெட்டு துக்கம் சம்பவித்து துன்பக்கடலில் மூழ்கி வருந்தித் தவிக்க இடமுண்டாகிக் கதறிஅழுதுக் கடவுளைக்கடிந்து நிற்பார்கள்.

இவ்வாறே லௌகிகப் பொருள்கள் யாவும் மனுஷரை வஞ்சிக்குந் தன்மையுள்ளது. குறைவற்ற செல்வமும், குன்றாத வாழ்வும், உடையவர்களென்று பலராலும் மெச்சப்படும், பெரியோர்கள் தங்கள் செல்வத்தை அனுபவித்துச் சந்தோஷிக்கிறார்களா? அவர்களுக்கு விசாரம் இல்லையென்று யார் சொல்லக்கூடும்? பெரும்பாலும் சீமான்களே நிர்ப்பந்தப்படுகிறார்கள். ஏதாகிலும் குறை அவர்களுக்கும் உண்டு. அதனால் அவர்களுக்குச் சஞ்சலந்தோ

ன்றும், சஞ்சலமானது, சாவாத புழுப்போலவும், அவர்கள் ஆயுளை அன்றன்று சிதைத்துக் குறைக்கின்ற கூரியவாள் போலவும் இருக்கின்றது. சஞ்சலமில்லாதிருப்பினும் உலக இன்பம் உள்ளதைக் கெடுக்கின்றது. துர்க்குணத்தை வளர்க்கின்றது.

3. தேடி அனுபவிக்கும் பொருள்களைக் காக்குந் திறமின்றிக் கவலைப்படுவது:—தேடி அனுபவிக்கும் இன்பத்தைக் காத்துக்கொள்வது மிகுந்த கஷ்டமான காரியமாயிருக்கிறது. உலகப்பொருள் ஒன்றாவது நிலையுள்ளதல்ல. விஷயங்களெல்லாம் தோன்றித்துலங்கி, மங்கி மறைந்துபோகின்றன. செல்வம் வண்டியுருளைப்போல மாறியும், யானையுண்ட விளாங்கனிபோல் சிதைந்தும், பட்சிபோல் பறந்தும், வெயில்முன் பனிப்போல் கரந்தும், மின்னல்போல் நொடியில்மறைந்தும், போகின்றன. உலகஇன்பம்மாறியும்,பறந்தும், மறைந்தும், கரந்தும், போவதால் அவ்வின்பத்தைக் காப்பதற்கு எவராலும் இயலாது. நெடுநாள் வரையில் சமைத்து நிறைவேற்றிய, விசித்திராலங்கார மாளிகைகளும், சடிதியில் வீசும் சண்டமாருதம், விழும் இடி, சத்துருக்கள், முதலிய இடையூறுகளால், நொடிக்குள்ளே விழுந்து பொடிப் பொடியாய் தரை மட்டமாவதுபோல, இவ்வுலகத்தில் அனுபவிக்கும் எவ்வித இன்பமும் எண்ணிறந்த இடையூறுகளுக்கு ஏதுவாயிருப்பதால் அதைச்சிதைவின்றிக் காப்பது முழுமையும் அசாத்தியம்.

இத்யாதி விஷயங்களினாலே, உலகவாழ்க்கையில் உண்டாகும் இன்பம் பூரண இன்பமல்லவெனச் செவ்வனே விளங்குகின்றன வாகலான் இனியேனும் இகலோக பாசங்களில் பந்தப்பட்டு உடலைவிட்டு எடுத்தபிறவியைப் பயன்படுத்திக்கொள்ள வகையின்றி மோசம்போகாமல் எச்சரிக்கையாயிருந்து பரசாதகமான கருமங்களைப் புரிந்து சதாதெய்வத்தியான நிரதர்களாய் இலங்குவோமாக.

முற்றிற்று. தஞ்சைபுரிநேசன்.

## தமிழ்ப் பாஷை.

மேற்றிசையோர் தத்தம் சொந்த பாஷைகளை எவ்வளவோ கௌரவமாய்ப் பொன்போற் போற்றி அபிவிர்த்திசெய்துவர நம்மவருட்பலர் தேசாபிமானமும் பாஷாபிமானமும் இல்லாராய்த் தமது தாய்ப்பாஷையாகிய அமிழ்தினும் இனிய தமிழ் முது மொழியை அநாதரவு செய்து "நறுவிய வாயின வேனும் உமிழ்ந்து கடுத்தின்னும் தீய விலங்கிற் சில" போன்றும், "திருவினும் நல்லாள் மனைக்கிழத்தியேனும் பிறர் மனைக்கே பீடழிந்து நிற்பார்" போன்றும் கேவலம் உத்தியோக பதவி பொருளீட்டல் முதலியன கருதி அந்நியபாஷைக் கற்றுவருவது காலக்கொடுமையோ? ஞாலக் கொடுமையோ? அறியேம்.

ஆ! ஆ!! தங்கள் கையெழுத்துக்களைக் கூடப் பிழையற எழுதத் தெரியாதார் எத்துணை பேர்கள் இருக்கின்றனர்! தமிழ்ப்பாஷை தெரியாமல் இருப்பது தங்களுக்குப் பெருங் கௌரவம் என்றும், எவ்வளவுக் கெவ்வளவு தெரியவில்லையோ அவ்வளவுக் கவ்வளவு தங்களுக்கு ஆங்கிலபாஷா ஞானம் அதிகமாய் உண்டென்று உலகு நினைக்கும் என்றும் எண்ணும் பேதை மாக்கள் எத்துணை பேர்கள்! தமிழிற் பேசினும் முக்காற்பங்கு இங்கிலீஷும் காற்பங்கு தமிழுமாய் மணிப்பிரவாள நடையிற் புகல்வோர் எத்துணை பேர்கள்! "சரித்திரங்களையும் சாஸ்திரங்களையும் தமிழில் மொழி பெயர்க்கலாம் என்றால் சில விஷயங்களை அறிவிக்க ஏற்ற மொழிகள்

கண்டு பிடிப்பது கஷ்டமாயிருக்கிறது" என்று சொல்வதற்கு ஹிஸ்ட்ரீஸ்களையும் ஸயன்ஸ்களையும் டமில் லாங்வேஜில் ட்ரான்ஸ்லேட் பண்ணலாம் என்றால் சில திங்ஸ்களை எக்ஸ்ப்ரஸ் பண்ண டெக்னிக்கல் டெர்ம்ஸ்களை ப(f)யிண்ட் ஔட் பண்ணுகிறது பெரிய டிபிகல்டியாக இருக்கிறது" என ஒரு சாரார் சொல்வர் என்ற மிஸ்டர் திருச்சிற்றம்பலம்பிள்ளையின் வாக்குப் பொய்யின்றே. ஏனெனில், இற்றைக்கு ஐந்தாறு வருடங்களுக்கு முன் மதுரை அமெரிகன் மிஷன் ஹைஸ்கூலைச் சார்ந்த பாலதிராவிட சங்கத்தின் வருஷோற்சவ தினத்தில் மதுரை வாசியாகிய ஓர் பிரபல வக்கீல் எழுந்து "Chairman and கனவான்களே english mix பண்ணுமே இந்த little fellows, nay, young men அதாவது சிறுவர்கள் என்ன speech கொடுக்கறு நம்ப ரெண்டு words கூட continual ஆய்ப்பேசுறது எம்பிட்டு impossible ஆ,ருக்கு. What do you think? என்னெப்போல் difficulty experience பண்ணியிருக்கிறவா இந்த assembly லே இருப்பாளே. அவாளுக்கு என் words tru என்றுபடும் ... ... " என்று இவ்வாறு பலர் கரகோஷஞ்செய்ய அரைமணி நேரம் பொழிந்து தீர்த்தது யாம் அறிவோம். நிற்க, தமிழினைப் பெரிதும் உபேக்ஷை செய்யும் புண்ணிய புருஷர்களை "ஏன் ஐயா தமிழ் கற்கப் பிரியம் கொள்வதில்லை?" என்று கேட்டால், அவர்கள் "தமிழ்லே என்னருக்கு?" என்றுவாய்கூசாமற்சொல்வர். "தமிழில் என்ன ஐயா இல்லை?" என்றால் அதற்குத்தரம் சொல்லார். சிறிது வற்புறுத்திக் கேட்டாலோ "ஒண்ணும் இல்லே" என்று நீட்டி முழக்கி அடித்தொண்டையோடு அலறுவர். அதிகமாய் வற்புறுததிக் கேட்க ஆரம்பித்தால் "னேக்கு வாண்டாம் ஐயா, ஒங் தமிழ் நீயே வச்சுக்கோ" என்று இருப்பிடம் விட்டு எடுப்பர் ஓட்டம். ஆத்திச்சூடி கூடப் படித்திரா அநேகர் தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் தம் ஊத்தைவாய் திறந்து பழுது கூற முன்வருவது எவ்வளவு மௌடீகம்?

ஆ! ஆ!! தொன்று தொட்டுச் சீரும் சிறப்பும் பெற்று அறம் பொருள் இன்பம் வீடு அடைவதற்கேதுவாயுள்ள எண்ணிறந்த நூற்பெருக்கத்தையுடையதும்; கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம் முதலிய பாஷைகளுக்குப் பெற்றோர் நிலைமையிலிருந்து பேருதவிபுரிந்துவரும்பெருமையுடையதும் திராவிட முழுதும் ஏகசக்ராதி பத்தியம் செலுத்தி வந்ததுமான நம் தமிழ் அணங்கு இக்காலத்தில் க்ஷீணதிசை யடைந்து போற்றப்படாது நிற்றற்கு முதற்காரணம், அதன் அருமை பெருமை தொன்மை முதலியன அநேகர் அறியாதிருத்தலேயாம். ஆதலின் இனியாம்அதன்வரலாறுகூறுவாம்.

## தமிழ் மொழியின், வரலாறு.

"தமிழ்" என்ற பதத்திற்கே ஓர் சரித்திரம் உளது எனில் அப்பாஷையின் சிறப்பை என்னென்று எடுத்துரைப்போம். தமிழ் என்ற சொல்லுக்கு முடிவும் பொருளும் பலர் பலவாறு கூறுவர்:—

1. பிரயோக விவேகத்தார் திமளம் என்பதன் திரிபு தமிழ் என்பர்.

2. சென்னை மாகாணக் கல்லூரி பாஷா விற்பன்னராய் இருந்த சேஷகிரி சாஸ்திரியார் போல்வார் பிரயோக விவேகத்தாரது கூற்றை ஆதாரமாகக்கொண்டு திராவிடம் என்னும் பதமே திரமளம் என்றாய், பின் அது திமளம் என்றாய்க் கடைசியில் தமிழ் என்றாயிற்று என்பர்.

3. கால்ட்வெல் பாதிரியார் தமிழ் என்பதும் திராவிடம் என்பதும் திரமளம் என்னும் மொழியினின்று தோன்றியவை என்பர்.

[இம்மூவரது கூற்றும் ஒப்பத்தக்கனவல்ல. ஏனெனில், தமிழ் வழங்கிய இடத்தில் தமிழ்க்கோர் பெயர் இருந்ததில்லை என்று சொன்னால் யார்தாம் ஒப்புவர்? தவிரவும் தமிழில் தமிழ் என்னும் பதம் வருவதற்குமுன் திராவிடம் என்ற ஆரியமொழி இருந்திருக்குமானால், அப்பெயர் எப்பொருளை உணர்த்திற்று? இன்னும் பார்ப்போம்: ஒன்றன் பெயர் அது வழங்குமிடத்திற்றான் பிறந்திருக்கக்கூடுமேயன்றி அஃதில்லாப்பிறிதொரு தேசத்தே பிறந்திருக்கக்கூடும் என்பது சிறிதும் பொருந்தாதே.]

4. ஒரு சாரார் "தமிழ்" என்னும் பதம் "திராவிடம்" என்றாயிற்றே யன்றி "திரவிடம்" என்பதன் சிதைவு அன்று "தமிழ்" எனச் சாதிப்பர்.

[இவர் கூறுவதும் சரியெனக் கொள்ளமுடியாது. ஏனெனில் "திராவடம்" என்னும் பதம் தேயத்தைக் குறிக்குமேயன்றி பாஷையைக் குறிப்பதன்று. திராவிடம் என்னும் பதம் திரா என்னும் அடியாய்ப்பிறந்து மகாநதி முதற்கோடி மண்டலம் வரை ஓடி வளைந்த பூமியை உணர்த்தும். [திரா=ஓடி வளைந்த]

(இன்னும் வரும்)

M. கோபாலகிருஷ்ண ஐயர்.
அக்கிராஸனாதிபதி மாணவர் செந்தமிழ்ச் சங்கம் மதுரை.

## பிள்ளை வளர்ப்பு.

குழந்தைகளை மிகவுஞ் செல்வமாய் வளர்க்கக்கூடாது. வளர்க்கும் பக்ஷத்தில் பெரியவர்களாகும்போது அவர்கள் கஷ்டங்களைப் பொறுக்கச்சக்தியற்றிருப்பார்கள். மேலும் அவர்களை அதிகமாய்ச் சீராட்டக்கூடாது. பிள்ளைகள் பயபக்திகெட்டவர்களாய் படிப்பொட்டாமல் கடைசியில் உப்புக்கல்லுக்கும் உதவாக்கரையாய்விடுகிறார்கள். ஆதலால் மனம்போனபடி வளரவிடாமல் பிள்ளைகளுக்குத் தகுந்த அடக்கவணக்கங்களுக்குஉட்படுத்தி வரவேண்டியது. சிறுபிள்ளைத்தனத்திலேயே பிள்ளைகளுக்கு விநயபயங்களையும் கீழ்ப்படிவும் மரியாதையும் கற்பிக்கவேண்டியது. பாலியத்தில் நாட்டிக்கொள்ளும் அப்பியாசங்கள் தவறாமல் விருத்தியடையுமாதலின், நற்குணங்கள் பிடிபடுமாறும், துர்க்குணங்கள் தொலைந்துபோகுமாறும் தாய்தந்தையர்கள் தகுந்த ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளவேண்டியது. தாய்தந்தையர்களிடத்துப்பயபக்திகள் காட்டி அவர்கள் சொல்லியவண்ணம் பிள்ளைகள் நடந்துகொள்வது மிகவும் ஆவசியகமானது. ஆதலால் அவர்களுக்கு எவ்வளவு அன்பு நிறைந்திருந்தபோதிலும் பயபக்திகளுடன் கூடியிருக்கவேண்டியது. மேலும் பிள்ளைகள் விஷயமாய் எடுத்துக்கொள்ளும் ஜாக்கிரதைகளில் தாய்தந்தையர்களிருவரும் ஒற்றுமைப்பட்டிருக்கவேண்டியது.

ஒருவர் செய்வதை இரண்டாம்பேர் என்றைக்கும் கெடுப்பது கூடாது. தாய் குற்றங்கூறுகையில் தகப்பன் குறுக்குப்படுவதும், தகப்பன் குற்றங்கண்டபொழுது தாய்தடுக்கவருவதும் சரிப்படாது. அன்றியும் அவர்கள் பிள்ளைகளுக்கு அசாத்தியமான வேலைகளையாவது கீழ்ப்படிய முடியாக் கட்டளைகளையாவது ஏற்பாடுசெய்து அந்தவண்ணம் அவர்கள் செய்யாவிடின் கீழ்ப்படிவில்லாமையாகப் பாவிப்பது கூடாது. பிள்ளைகளிடத்துத் தாய்சந்தையர்கள் அன்புகூர்ந்திருக்கவேண்டும். அன்பே பிள்ளைகளுக்கு அமிழ்தம். அன்பில்லாவிடின் அவர்கள் செவ்வையாய் வளரமாட்டார்கள். குற்றங்கள் செய்தபொழுது அன்புடனேயே அவர்களுக்கு நல்லொழுக்கத்தைப் போதிக்கவேண்டியது. கோபித்துக்கொண்டபொழுதும் அடம்பிடித்

தபொழுதும் அவர்களையன்புடனேயே மீட்கவேண்டியது. அன்பில்லாவிடின் பிள்ளைகளுடைய மனதிற்தக் குதூகலமிருக்கமாட்டாது. இவ்வுலகத்தில் பிள்ளைகளுக்கு அன்பே எல்லாவற்றிலும் அதிகமான சவுக்கியம். முக்கியமாய்த்தாயினுடைய அன்புக்குச்சமானமானது ஏதுமில்லை. எத்தனை வேலைகளிருப்பினும் தகப்பனானவன் பிரதிதினமும் கொஞ்சகாலத்தைத் தன்னுடைய பிள்ளைகள் விஷயமாய்ச் செலுத்தவேண்டியது. அவ்வாறு செய்தாலே அவர்களுடைய புத்தியுக்திகளும் இயற்கைகளும் அறிந்துசொல்லுவதற்கும் அவர்களைச் சன்மார்க்கத்தில் நிறுத்துவதற்கும் அனுகூலமேற்படும். மேலும், தகப்பனானவன் எவ்வளவு பெரியவனானபோதிலும், தன்னுடைய குழந்தைகளுடன் சற்றுநேரம் விளையாடிக்கொள்வது தன்னுடைய பெரிய மனுஷத்தனத்திற்குக் குறைவாய் எண்ணக்கூடாது. சொல்லிய வண்ணம் சரியாய் நடந்துகொள்ளும்போது குழந்தைகளுக்குப் பழங்கள் பணியாரங்கள் முதலியவற்றைபாவது துட்டுகளாவது வெகுமானமாய்க் கொடுக்கக்கூடாது. அவ்வித வெகுமானங்கள் கொடுப்பதினால் சொல்லிய வார்த்தைகள் கேளாதிருப்பதற்கு அவர்களுக்கு இன்னும் கொஞ்சம் தூண்டுகோலாய் விடும். குழந்தைகள் நல்ல காரியங்களைச்செய்தபொழுது அவர்களைப் புன்சிரிப்புடன் நோக்கி மெச்சிக்கொண்டு சந்துஷ்டியடைவதே அவர்களுக்குப்பெரிய வெகுமானம். அதினால் பிள்ளைகளுக்கு ஆனந்தம் பெருகுவதுபோல் வேறெதனாலும் உண்டாகமாட்டாது. தாய்தந்தையர்களின் புகழ்மொழிகள் பிள்ளைகளுக்கு அத்தியந்தமகிழ்வு. நல்ல வேலைகளைச்செய்வதற்கு அவை தூண்டுவதுபோல மற்றேதொன்றும் செய்யமாட்டாது. புகழத்தக்க வேலைகளைச் செய்யும்பொழுது பிள்ளைகளை ஒழியாமல் துதிப்பதுங்கூடாது.

(இன்னும் வரும்.)

M. S.

## ஆரோக்கிய மார்க்கங்கள்.

ஆலோசித்துப் பார்க்குமிடத்துப், பிறந்தது முதல் சரீர ஆரோக்கியத்தைக் கருத்துடன் காப்பாற்றிக்கொண்டு அதன் விஷயமாய்த் தகுந்த சாக்கிரதை யெடுத்துக்கொள்வதே தீர்க்காயுளுக்கு ஒரே வழியாகக் காணப்படுகின்றது. ஆதலின் எவ்வெந்தக் காரியங்களினால் ஆயுட் சீணத்திற்குக்காரணங்கள் ஏற்படுமோ, எப்படிப்பட்டவை ஆயுள் விர்த்திக்குச் சாதனங்களாயிருக்குமோ அவைகளைத் தெரிந்திருப்பது உபயோககரமானது. தீர்க்காயுளுக்குப் பரிசுத்தம் ஆவசியகமானது. சரீரத்தையும் வஸ்திரங்களையும் வீட்டையும் மற்றெல்லாவற்றினையும் பரிசுத்தமாய் வைத்திராதபக்ஷத்தில் வியாதிகள் தவறாமல் பிறக்கும். ஆரோக்கியத்திற்கு நித்தியஸ்நானம் அத்தியந்த ஆவசிகம். அப்போதப்போது சமுத்திரஸ்நானம் செய்வதினால் சரீரத்துக்கு உறுதியுண்டாகும். ஆகாரத்தை வேளை தவறாமல்புசிப்பதும், போசனசமயத்தில்எவ்விதவிசாரமும் மனத்தினில் வைத்துக்கொள்ளாமல் உல்லாசமாயிருப்பதும், மிதமாயும் அமைதியுடனும்புசிப்பதும், இராத்திரியில் இலகுபோஜனம செய்வதும்—இவையெல்லாம் தீர்க்காயுள் பெறும் வழிகள். சாப்பாட்டு ராமத்தனத்தினால் சீரண சக்தி குன்றி ஆயுட்சீணம் லபிக்கும். மச்ச மாமிசங்களைப் புசிப்பவர்களைக்காட்டிலும் காய் கறிகளைத் தின்பவர்கள் அதிககாலம் சீவித்திருப்பார்களென்று சிலர்பெரும்வைத்தியர்கள் துணிவுற்றிருக்கிறார்கள். குடியினால் ஆயுள் குறைவுற்றுப்போகும. பிராந்தி புட்டித் தோழர்காள்! இதினுண்மையை மனதில் நிறுத்துங்கள். தீர்க்காயுளை அபேக்ஷிக்கு

மவர்கள் நித்திரை விஷயமாய்த் தகுந்த ஜாக்கிரதை மேற்கொண்டிருப்பது
மிகவும் முக்கியமானது. விழித்துக்கொண்டிருக்குங் காலத்தில் ஜீவசக்தி
யதிகமாய்ச் செலவிடப்படுமாதலின், அது மறுபடியுங்கூடி வருவதற்கும்,
அவயவங்களுக்குக் களைதீர்ப்புண்டாவதற்கும் நித்திரைமிகஆவசியகமானது.
அதிக நித்திரையினாலும் அற்ப நித்திரையினாலும் ஆயுள் க்ஷீணமடையும்.
கண்டபொழுதெல்லாம படுக்கையிலேயே கிடந்திருக்கும் மகானுபாவர்களை
து சரீரங்கள் சோம்பேறித் தனத்தி லூறிப்போய் வியாதிகளுக் குறைவிட
ங்களாய் விடும். அற்பநித்திரையினால் இளைப்பாற்றம் போதாமல் தேகஉறுதி
கெட்டுச் சீக்கிரமாய் விருத்தாப்பியம் வந்து சேரும். பிரதிதினமும் 6-மணி
தேசகாலத்திற்குக் குறைவுபடாமலும் 8-மணிப் போழ்துக்கு அதிகப்படாம
லும் நித்திரை செய்யவேண்டியது. பகலில் நித்திரித்து இரவுகளில் விழி
த்திருப்பது அற்பாயுளுக்கு மூலகாரணமாகும். இராத்திரிச் சமயங்களில்
நெடுநேரமட்டும் விழித்திருக்கக் கூடாது. முன் சாமத்தில் படுக்கப்போய்
விடியற்சாமத்தில் துயிலெழுவது தீர்க்காயுளுக்கும் ஆரோக்கியத்திற்கும்
நல்வழியென்று பெரியோர் கூறுகிறார்கள். சீக்கிரத்தில் படுத்து அருணோத
யத்தில் எழுந்திருந்தால் சரீரத்தில் உற்சாகம் நிலை உற்றிக்கும். பொழுதே
றியபிறகு எழுந்திருக்கும் வழக்கமுள்ளவர்கள் அற்பாயுசுக்காரர்களாவதே
யன்றி விருத்திக்குக்கூட வராமல் மூதேவிக் கிருப்பிடமாய் விடுவார்கள்.
போஜனம்செய்தவுடனே சயனிக்கக்கூடாது. சயனித்தால் ஜீரண கோசத்
திலிருக்கும் பாரவேற்றத்தினால் நித்திரை கலக்கப்பட்டதாகி கனவுகளும்
பிதற்றுகளும் அதிகமாகும். மேலும் நித்திரை நீங்கியபொழுது உற்சாகத்தி
ற்குப் பதிலாய்த் தளர்ச்சியும் சிடுமூஞ்சித் தனமும கொட்டிவழியும். படித்
துக்கொள்ளு நிலையிலேயே படுத்த்சதூங்குவது பெரிய துரப்பியாசம். படி
க்கப்பட்ட விஷயங்கள் தூக்கத்தில் நினைவுக்குத் திரும்பி மனவமைதி
யைக் கெடுத்து விடும். சயனிக்கும் பொழுது மனத்தினில் எவ்வித வி
சாரங்களையுமாவது ஆலோசனைகளையாவது வைத்துக் கொள்ளக் கூடாது.
நிர்மல நெஞ்சுடன் நித்திரிக்க வேண்டியது. எவ்வளவேனும் சஞ்சலமி
ருந்த போதிலும் நன்றாய்த் தூக்கம்பிடியாது. மேலும் பிரதிதினமும் எ
றவோ குறையவோ சரீரப்பழக்கமில்லாவிடினுஞ் செவ்வையாய்த் தூக்கம்
வரமாட்டாது. சரீரத்தைக்கஷ்டப் படுத்தாமல் வீட்டிலேயே கிடந்திருக்கும்
பணக்காரர்களுக்குப் பட்டுப்படுக்கைகளின் மேற்சயனித்தாலும், கண்ணுக்கு
இமைப்பாடேனும் வராதிருப்பதும், பாடுபட்டுழைத்துப் பிழைத்து வரு
ம் கூலிச்சேவகக்காரர்கள் கரடுமுரடான கற்றரைகளின் மேல் படுத்தாலு
ம் அயர்ந்து அறிவு நீங்கி உறங்கிச் சுகிப்பதும், அனைவரும் அறிந்த வி
ஷயமே யல்லவா?

(இன்னும் வரும்.) M. S.

## உருக்குமணி,

### இரண்டா மதிகாரம். உருக்குமணி கிருஷ்ணனிடம் தூதனுப்புதல்.

உடனே கலியாணத்திற்குச் சித்தமாயிற்று. ஊரெங்கும் விழ நா
ளாயிற்று. குடிகளனைவரும் தம் கோமகளின் கலியாணத்தை நோக்கிக்
களித்தாராயினும், உருக்குமணி மட்டும் கவலைக் கடலிலாழ்ந்தாள். சிறுவய
திலிருந்து காதலித்து வந்த கண்ணனை நீக்கி என்றனும் கேட்டிராத சி
சுபாலனை எவ்வாறு மாலையிடலாகும்? ஐயோ! தன் உடலையும், உயிரையும்
கிருஷ்ணனுக்கு அர்ப்பணஞ்செய்ததைத் தன் அண்ணன் அறியானோ? கிரு

ஷ்ணனின்றித் தான் உயிர் வைத்திருப்பது கூடுமோ? இதுவரைக்கும் உருக்குமணி தன் அண்ணனை உள்ளன்போடு நேசித்து வந்தாளெனினும், அவனுடைய வேறுபட்ட எண்ணத்தையறிய அவளுக்கு வெறுப்புண்டாயிற்று. ஆயினும் அச்சிறுபெண் என் செய்வாள்! அண்ணனிடம் போய்த் தன் அந்தரங்கத்தைச் சொல்லி அவன் மனதைத் திருப்ப முடியுமோ? அவள் ஒன்றுஞ்செய்யத் தோன்ருமல் மயங்கி நின்று முடிவில் தனக்கு வேண்டிய ஓர் அந்தணரை யழைத்து, தன் எழ்மைநிலைமையை விவரித்து, கிருஷ்ணனுக்குஓர் கடிதமெழுதிக்கொடுத்து, "சுவாமி, கிருஷ்ணனைக்கண்டு என்நிலைமையை யுள்ளபடி உரையுங்கள். என்போன்ற இளம்பெண்கள் அச்சத்தையும், நாணத்தையு மகற்றி அகத்திலுள்ளவை யெல்லாம் அந்நியர்க் கறிவிப்பது ஆகாதே. என் ஆசைக் கண்ணனை நான் இராப்பகல் எண்ணி யெண்ணி ஊணையும், உறக்கத்தையும் ஒழித்தேனென்று சொல்லும். காதல் மிகுதியால் உள்ளம் நைந்து உடல் மெலிந்து உயிர் விடுந்தருவாயி லுள்ளேனென்று சொல்லும் என்ருள்.

---

### மூன்றமதிகாரம். அந்தணர் கிருஷ்ணனைக் காணுதல்

அந்தணர் அநேக ஊர்களைக் கடந்து மதுரையை யடைந்து கிருஷ்ணனைக் கண்டபோது பொழுதுபோகும் வேளையாயிற்று. கிருஷ்ணபகவான் நவமணிகளிழைத்த அநேக அணிகள் பூண்டு, அவ்வணிகளின் காந்தியால் அவரது கார்மேனி துலங்க, நகைபூத்த முகத்துடன் தம்மரண்மனையில் அழகிய சிங்காசனத்தி லமர்ந்திருந்தார். அந்தணரைக் கண்டதும், கிருஷ்ணன் ஆசனத்தை விட்டெழுந்து அவருக்கு வந்தனை வழிபாடுகள் செய்து தாம் உட்கார்ந்திருந்த ஆசனத்தில் அவரை யுட்காருவித்து அடுத்து நின்று, வந்த சங்கதி யாதெனக் கேட்டார். வேதியர் தாம் கொண்டுவந்த கடிதத்தைத்தர, கிருஷ்ணன் வாங்கி அதனைப் பிரித்துப் பார்க்க அடியில் வருமாறு எழுதியிருந்தது:—

(இன்னும் வரும்.)

ப. சி. கோவிந்தசாமி ராஜா.

## நல்லுரை.

(1) ஆயிரக் கணக்கான காகித படங்கள் ஆகாயத்தில் பறக்க விடப்படுகின்றன. அவைகளில் ஒன்று அல்லது இரண்டுதான் கயிற்றிலிருந்து விடுபட்டுப் போய்விடுகிறது. அதுபோல் நூற்றுக் கணக்கான சாதுக்களில் ஒருவர் அல்லது இருவர்கள் மாத்திரந்தான் உலகபந்தத்திலிருந்து விடுபடுகிருர்கள். (2) ஒரு கயிற்றைச் சுட்டாலும் அது சேர்க்கையாய் முந்திய ரூபத்துடனிருக்கிறது; ஆனல் சாம்பலாகி எதையும் கட்ட உதவாது. அதுபோல கடைத்தேறின ஒரு மனிதன் அகங்காரமுள்ள தேகத்துடனே இருக்கின்ருன்; ஆனல் அவனிடத்தில் அந்த அகங்காரத்தின் சத்து இல்லை. (3) எவன் சத்தியமாயும் அதிக ஊக்கத்துடனும் கடவுளிடம் சொல்லக் கூடியவனயிருக்கின்றனே அவனுக்கு குரு அவசியமில்லை. அப்படிச் சத்தியமும் ஊக்கமும் பொருந்தியிருப்பது துர்லபமாகையால் வழி காட்டுகிறவர் அல்லது குரு தேவையாயிருக்கின்றது. (4) தேமல் அல்லது பூச்சிக் கடியைச் சொறியும்போது அதிக இன்பமாயிருக்கிறது; பிறகு உண்டாகும் எரிச்சல் தொந்திரவாயும் பொருக்க முடியாததாயுமிருக்கிறது. அதுபோல உலக இன்பம் ஆரம்பத்தில் அதிக சந்தோஷத்தைக் கொடுக்கிறதெனினும் பிந்திய அநுபோகத்தில் அதை நினைப்பதற்கே பயங்கரமாயிருக்கிறது. (5) கம்பம் அல்

வது தூணை ஒரு பையன் பிடித்துக்கொண்டு விழுந்துவிடுவோமென்ற அச்சம் சிறிதுமின்றி எப்படி வேகமாய் சுற்றுகிறானோ, அதுபோல கடவுளின்பேரில் திடமாய் உன்.பிடியை நிறுத்தி உன்னுடைய உலக காரியங்களை நடத்தினால் யாதொரு அபாயமுமில்லாமல் செய்து முடிக்கலாம்.

## மாமிஷ போஜன மறுப்பு.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்.

கடவுளாலாக்கப்பட்ட ஐந்தறிவினையுடைய மன்பதைகளொவ்வொருவருக்கும் இயற்கையில் ஜீவகாருண்யம், பக்ஷாதாபம், தயை, இனியவை கூறல் முதலியன உடைத்தாய், ஜீவவதை செய்யாது, புலால் மறுத்து, அறத்தினைக் கடைப்பிடித்து, தவநெறி பற்றி, ஈஸ்வர தியானத்தால் அருட்பேறு பெற்று, மோக்ஷ சாம்பிராஜ்யமடைய விரும்புவதே இம்மானிட தேகமெடுத்ததற்குறிய நற்பெயராம்.

அன்றியும், மனமான்து பொறிவழி செல்லாது நிற்க, விரதங்களினாலே புலாலை மறுத்து உண்டி சுருக்கி, தம்முயிர்க்கு வருந்துன்பங்களைப் பொறுத்து, பிறவுயிர்களைக் கொல்லாது காப்பாற்றுவதில் ஜீவகாருண்யம் மேலிட்டு அண்ணலின் அருள் சுரந்தவிடத்தே இன்ப வீடு பெறுதல் இயல்பாதலால்; பரமசாம்பிராஜ்யமடைவதற்கேதுவாகிய கொல்லாமையும், புலாலுண்ணாமையுமே ஐந்தறிவினையுடைய மன்பதைகளுக்குச் சிறந்த சான்றாகும். இதைத் தவிர்த்து, (தமக்கு) முன்செய் தீவினையினால் பிணிவந்துற்று தாம் வருத்தமடையுங்கால் ஆஹா முற் பிறப்பிற் செய்த கொலை பாதகத்துக் கேதுவாகிய புலாலுண்ட வினையன்றோ இங்ஙனே வந்து மூண்டதுவெனச் சிந்தித்து புலாலை மறுத்துவிட்டொழியாது கன்மவினைச் சாபத்தாலுண்டான 'அந்தகாரமென்னும் அஞ்ஞான விருள்போர்த்த மாந்தர்கள்; அருட் கடவுளைப் போற்றித் துதியாது அன்னியவைகளை நினைத்து தமக்குற்ற பிணிக்காடுதீரின் மாிக்காவு தருவோமென்றும், ஏவல் வஞ்சனை தீரின், சேவல் பலியிடுவோமென்றும், மூடமதியினால் சிந்தித்து நரகவாதனைப் படுகுழியில் வீழ்ந்து வருந்தி வாடித்தவித்து கரையேறுந் துறை தெரியாது, கவலையுறுகின்றனர். அதை யுணர்ந்தன்றோ கொலைபடும் ஜீவஜெந்துக்கள் யாவும் கொற்றவனை நினைந்து கொல்பவனைக்கடிந்து கோகோவெனக்கதறி கூவிக் கூவிக கூக்குரலிட்டுக், கண்ணீர் சொறிந்தழுது

"உங்கள் மக்களும் நீங்களும் நோய்பட
எங்கள் மக்களும நாங்களு மென்செய்வோம்".

என, அதி விசனத்துடன் ஆதிமாதாவை நோக்கி "அம்மே அம்மே" என்றலறி ஏ! கொலைபாதகப் புலையர்களே! நீங்கள் சுகமடைவீர்களா? உங்கள் பெண்டீர் முண்டையாகார்களா? நுங்கள் மக்கள் தீங்குறார்களா? நுங்குடி ஈடேறுமா?, என்றும்,

"மலையென்னும் வினைதீர மறுவற்ற புனல் மூழ்கி
அலைகின்ற முழுமூடா அறிவென்ன யறிவென்ன
புலையன்றன் மலமுண்ணு மெனையுண்ணும் புலையர்க்கு
குலமென்ன நலமென்ன கூகூவென்றன கோழி"

அதாவது ஏ! மாமிஷமுண்ணும் மடமை குடிகொண்ட மாந்தர்காள்! கேண்மின் கேண்மின். மலையினும்பெரிதாகிய பாவங்களைத் திரளாகத்தேடி அலைவ

யொழியுமாறு பரிசுத்தமாகிய குற்றமற்ற கெங்கை, காவிரி, முதலியபுண்ணிய நதிதீரங்களில் ஸ்நானம் செய்து அலைகின்ற மூழ மூடர்களே! உங்களுடைய புத்தி என்ன புத்தி? அற்ப புத்தியேயாம். ஜாதியில் தாழ்ந்தவனென்று உங்களால் இகழ்ந்து தள்ளப்பட்ட பறையனது மலத்தைப் புசித்துப் பசிநோய் நீங்கிக் கொழுப்படைந்திருக்கிற என்னைக் கொஞ்சமு மஞ்சாமல் புசிக்கின்ற பஞ்சமாபாதகப் பெரும் புலையராகிய உங்களுக்கு ஜாதிபேதமென்ன? ஆசாரமென்ன? இதை நோக்கில் ஆச்சரியமாகவே யிருக்கின்றதெனச் சொல்லுவதுபோல ஒவ்வொரு நாளும் வைகறைத் துயிலெழுமுன் (சேவலானது) தன்குஞ்சுகள் எவ்வாறாகுமோ! நாமெவ்வாறாவமோ! என்றகவலை மேற்கொண்டு துக்கத்துடன் ஆர்ப்பரித்து, ஆரவாரித்துக்கொண்டு கண்களில் நீர் சொரியக் கதறிக்கதறி அழுதுகொண்டு சிலநாழிகைக் கொருதரம "கொக்கரக்கோ" "கொக்கரக்கோ" (அஃதாவது என்னைக "சொல்லுகிறதற்கோ" "கொல்லுகிறதற்கோ") எனக் கூவுகின்றதைக் கேட்டிலீர்களா? (இன்னும் வரும்.)

தஞ்சைபுரிநேசன்.

## நல்லொழுக்கம்.

"ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று" என்னும் உலக வழக்கப் பழமொழி யொன்றை யாராயுமிடத்து உண்டாகுங் கற்பனைக்கோர் முடிவில்லை யன்றோ? ஒருவன் நவ வியாகரண பண்டிதனாயினும், அளவிடுவதற்கரிய திரவியப் பெருக்கத்தை யடைந்தவனெனினும், அட்டதிசையிலுங் கொட்டை பறப்பும் ரணவீரகேசரியாயினும், அன்னவன் பால் ஒழுக்கம். என்னும் ஓர் ஈடில்லா ஆபரணமில்லையாகில் அவனை யுலகம் வந்திக்கப்படாது நிந்திக்கப் படுமன்றோ? இதை யொட்டியே "அடக்கம் ஆயிரம் பொன்" என்னும் ஓர் மொழி இவ்வாரிதிசூழ் வையகத்தில் யாவர் வாக்கிலும் வெகு இலேசாகப் போந்துலாவுகின்றன. இதன் பெருமையை பேனும் புகுந்து மிகுந்து கண்டு உவகைகொண்டாரில்லையே! எத்தனையோ திவ்ய க்ஷேத்திரங்கள் சென்றும் புண்ய நதிகளாடியும் தரைமீதுண்டும் அன்ன சத்திரம் தண்ணீர்ப்பந்தல் சாலை மரங்கள் தேவாலயங்கள் தெப்பக்குளங்கள் முதலாகிய தர்மங்களைச் செய்தும் பின் தெய்வானுக்கிரகத்தாலோர் புத்திரனை ஈன்றெடுத்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து ஐந்தாம் வயதில் பள்ளிக்கனுப்பி ஸத்குரு முகமாய் வித்யாப்பியாசம் பயின்று வைத்து நாளுக்குநாள் அபிவிர்த்தி யடைவதைக் காமுறக் கண்டு களிக்கும் மாதா பிதாக்களுக்கு அபவாத மேற்படாமற் காத்து குலமுறைஒழுக்கம் பிசகாது "இவனே சத்யன் இவனே சத்குல சிகாமணி இவனைப் பெற்ற அன்னை தந்தையர் என்ன தவம் செய்தனரோ" என்று கண்டோர் பேசப்புகழ் பெறவேண்டும்.

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம தீயொழுக்கம் என்றும் இடும்பைத்தரும்" என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் சுரிக்கிக் கூறிய விரிந்த விடையத்தை நன்மதியாகக்கொண்டு நயம் பெறாரில்லையே! பூர்வஜென்ம புண்யவசத்தால் இப்பூவுலகில் மானிடனாய் அவதரித்து ஏனைய ஜீவகோடிகட்குக் கிட்டாத உசித கைவல்யமான பகுத்தறிவைப் பெற்றும் நல்லொழுக்கத்தில் மனதை நாடவிடாது, சூதாடல், கட்குடித்தல், பொய் பேசல், களவாடல், பரநாரீ கமனஞ்செய்தல், புறமததூஷணம் பேசல், பெரியோரை நிந்தித்தல், முதலிய வேதவிலக்கைத் தழுவி நேசம் பாராட்டி கண்டவர் நகைக்கக் காலங்கழிப்பானேன்? இதை நாம் மட்டும் நவீனமாய்

நவில முன் வந்தோமில்லையே! இவ்விஷயமாய் தக்கவர்மிக்கக்கூடிவாயோயப் பேசியும் கையோய வெழுதியுமிருப்பதை நேரிலும் பலபத்திரிகை வாயிலாகவும் பார்த்திருக்கின்றோம். அதை அநுஷ்டானப் பிரமாணத்திற்குக் கொண்டுவராது விடுப்பதி னிழுக்கு எழுதவும் வேண்டுமா? பல எண்ணங்கள் கொண்ட படிகளினின்றும் ஒருவனிறங்குப்போது ஒரு படி தட்டிவிட்டால் மற்றதுந் தட்டி மண்கெளவத் தரையில் வீழ்ந்து அவஸ்தை கொள்வதுபோல பிரமசாரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்யாசம் என்னப்படும்நான்கு படிகளுக்கும் உரிய ஒழுக்கத்தின்றும் வழுவில் ஒன்றுக்கும் உதவியற்றவனாய் கொடிய கர்மங்களை யனுபவிக்கிறான். எக்குலத்தில் பிறந்தாலும். "உதர நிமித்தம் பெகுகிரத வேஷம்" என்று தன் ஜீவனார்த்தமாய் எத்தொழிலைச் செய்தாலும் தாம் தாம் நிற்கவேண்டிய நிலைமையைக் கெடுத்துக் கொள்ளப் போகாது ஆரிபப்பாவையாடினும் காரியத்திற் கண்ணிருப்பது போல் தம் ஒழுக்கமாகிய முக்கிட சாசனத்தைக்கைவிடாத் காத்துக்கொள்ளல்வேண்டும். ஒருவன் அநுபவிப்பதற்கு முடியாத பெருங்கஷ்டங்கள் வந்தெய்தியபோதும் அதனைத் திரணமா யெண்ணி எல்லாம் வல்லகருணாநிதியான கடவுளொருவருண்டென அவர்மீது பாரத்தை யேற்றி வணங்கல் வேண்டும். ஆகலான் ஒவ்வொருவரும் தந்தங்குல ஒழுக்கத்தினின்றும் வழுவாது சன்மார்க்கரெனப்பெயர் பெற்றுவாழவேணடுமென்பதே இவ்வெழுத்துகளின் சாரவிறுதி.

க. வீ. சந்தானகிருஷ்ண நாயுடு.

## கலாப்பிரகாசனி.

### இரண்டாம் பாகம். எட்டாவது அத்தியாயம்.

சற்றேறக்குறைய அறுபது ஆண்டுகட்கு முன் அதாவது பிரதமபாகத்திற் கண்ட சம்பவங்கள் நிகழ்வதற்கு நாற்பது வருஷங்கட்கு முன்னர் சந்திரகிரி எனும் நகரை வீரகேசரி என்ற வேந்தனொருவன் செங்கோலோச்சி வந்தான். அவனது ஆளுகையில் பிரஜைகள் ஸர்வஸாதகங்களையும்பெற்று ஸதா ஸந்தோஷ வதனர்களாய் ஸன்மார்க்கப் பிரவர்த்தகர்களாய் இருந்து வந்தனர். அவர் காலத்தில் அந்நகரம் நீர்வளம் மலிந்து நிலவளஞ்சுரந்து பொருள் மிக நிறைந்து திங்கள் மும்மாரி பொழிய பூதலம் புகழப்பிரகாசித்தது. இம்மன்னனுக்கு சுகுணமாலினி எனும் பெயரிய புதல்வியொருவளைத் தவிர வேறு புத்திரர்களில்லை. இதை யுணர்ந்திருந்த ஸ்வயநலப்பிரியர்களான பிரதாபன், துன்மதி, என்ற இவ்வரசனது அமைச்சர்களிருவரும் சந்திரகிரியைக் கவர்ந்து கொள்ளக் கருத்துற்று அதற்கிடையூறாயிருந்துவரும் அரச புத்திரியைக் கொன்றுவிட பல வஞ்சனோக்திகள் செய்து வந்தனர். இங்ஙன மிருப்புழி சுகுணமாலினிக்கு தசவருஷங்கள் கழிந்து பதினொன்றாவது பிராயம் பிறந்தது. அச் சுபதினத்தை பிரஜைகளனைவரும் பிரியமுடன் கொண்டாடி மகிழலாயினர். புராலங்காரம் மிகவும் நேத்திரானந்தமாயிருந்தது. சுகுணமாலினியின் புரப்பிரவேச மகோற்சவத்தைப் புகழாதவரெவருமில்லை. அந்யதேசியர்களும் புரநிவாஸிகளும் ஹிருதயானந்தமடைந்தனர். அன்றிரவு அரண்மனையில் கெர்ப்பிணிகளாயிருந்த வீரகேசரி மன்னனது இருமனைவிகளும் நவமாச பரிபூரணமாகி பட்ட மகிஷியான சுலோசனைக்கு இருகுழந்தைகளும் இரண்டாவது மனைவியான கமலாக்ஷி

க்கு ஒரு குழந்தையும் பிறந்தது. ஜனித்த மூன்று குழவிகளும் ஆண்மகவாயிருந்தன. வீரகேசரிமன்னன் மந்திரிகளிருவருடையவும் துரெண்ணத்தையறிந்து இக்குழந்தைகள் அரண்மனையிலிருப்பின் அதற்கு அபாயம் சித்திப்பது திண்ணமென்று ஆலோசித்துத்தனது ஆப்த மித்திரனாகிய கருணாகரனை அழைத்து அவனை நோக்கி என் பிராணநேசா! இப்பொழுது இக்குழந்தைகளை உன் வசம் ஒப்புவிக்கின்றேன்; என தமைச்சர்கள் தேசஹிதசிந்தர்களல்லவென்பதையும் அவர்களுடைய துராலோசனைகளையும் நீ அறிந்திருக்கின்றாய்; உன்னைத்தவிர இக்குழந்தைகளுக்கு வேறு போஷகரில்லை; இன்று தொட்டு இக்குழந்தைகட்குத் தாயும் தந்தையும் நீதான்; என்மீது நீ எவ்வளவு பிரியம் வைத்திருக்கின்றாயோ அதைவிட பதின்மடங்கு அன்பை ஒன்று முணராத இப்பாலகரிடம் பாராட்டி இவர்களைக் காப்பாற்றவேண்டும். பலவாறு சொல்லியென்ன, கடைசியில் உன்னிஷ்டத்திற்கு இதை ஒப்பிக்கொடுக்கின்றேன் என்று கண்ணீர் விட்டழுது அம்மூன்று குழந்தைகளையும் அவன் வசம் ஒப்புவித்தான். கருணாகரன் அரசனுக்குப் பலவாறு தேறுதல் கூறி விடைபெற்று பின் அவ்விரவிலேயே துணிகரஸ்தனாகலான் தானிருந்த கிராமத்திற்கு ஸகாயநிரபேக்ஷகனாய் மூன்று குழந்தைகள் சஹிதம் வந்து கொண்டிருந்தான்.

இஃதிங்ஙன மிருக்கப்பிரதாபனும் துன்மதியும் சுகுணமாலினி யறைக்குச்சென்று அங்கு ஒருவருமில்லாதிருப்பதைக் கண்டு அதுதான்தக்க தருணமென்று நினைத்து வீரகேஸரி மன்னன் அழைப்பதாய்க் கூறி அவளை எவரும் அறியாதபடி கூப்பிட்டுக் கொண்டு வந்து வண்டியிலேற்றி ஒரு பெருவனத்தினூடே சென்று கொண்டிருக்கும்போது மத்தியமார்க்கத்தில் குதிரை ஒரு வெளிச்சத்தைக் கண்டு மிரண்டு ஸ்வயேச்சையாய் ஓடத்தொடங்கிற்று. உடனே பிரதாபனும் துன்மதியும் அஸ்வத்தை அடக்கமுயல்வதில் கவனஞ் செலுத்த அத்தருணத்தில் சுகுணமாலினி தன்னை வஞ்சனை செய்தழைத்து வந்திருக்கின்றார்களென்றறிந்து இவர்களிடமிருந்து தப்பித்துக்கொள்ள இதுதான்சமயமென்றெண்ணித்துணுக்குற்றுவண்டியினின்றுங்கீழே குதிக்க அங்கிருந்த கல்லில் விழுந்து கபாலத்தில் பலமான அடிபட்டு அவ்வேதனையைப்பொறுக்க ஆற்றலற்றவளாய்அவ்விடத்திலேயேமூர்ச்சையானள். இவள் குதித்ததை அமைச்சர்களிருவரும் கவனித்திலர். தன்னிஷ்டப்படி ஓடிய குதிரை கடைசியில் வண்டியுடன் கருணாகரனுடைய கிருகத்தருகில் நின்றது, இருவரும் கீழே இறங்கி சுகுணமாலினியைக் காணாது வியப்புற்றவர்களாய் யோசித்துக் கொண்டிருக்கும்போழ்து தற்செயலாய் கருணாகரன் மூன்று குழந்தைகள் ஸஹிதம் தன்னில்லிற்குள் நுழைந்தான், இவனால்தான் சுகுணமாலினி தப்பித்துக்கொண்டு போயிருக்கலாமென்றெண்ணி உடனே துன்மதி அவனை வாளால் இருதுண்டாக வெட்டியெறிந்தான். அப்பொழுது சுமார் இரவு இரண்டு மணி இருக்கலாம். கடாந்தகாரமாயிருந்தது. கருணாகரனை வெட்டிய தருணத்தில் அவன் தன்னுடன் கொண்டு வந்திருந்த விளக்கானது தன்னிச்சையாக எங்கோஒடுவது போல் தோற்றிற்று. இதைக்கண்டு அச்சமுற்ற இவ்விருவரும் உடனே வண்டியேறி தாங்கள் சென்ற காரியம் சித்திக்காமற் போனதைக் குறித்து விசனப்பட்டுக்கொண்டு அன்றிரவே சந்திரகிரி வந்து சேர்ந்து விட்டனர். அரசனுக்கு குழந்தைகள் பிறந்த விஷயம் மருத்துவச்சி, கருணாகரன், வீரகேசரிமன்னன் இம்மூவரைத்தவிர வேறெவருமறியார், பரதமத்தில் பட்டமகிஷிகள் கெற்பமானதே ஒருவருக்குந் தெரியாது. அவ்விஷயத்தை அவ்வளவு அந்தர

ங்கமாய் வீரகேஸரியன்னன் வைத்திருந்தான். மறுநாட்காலையில் சுகு
ணமாலினியைக் காணோமென்ற சப்தம் எங்கும் பரவியது. அரசனிதை
யுணர்ந்து வியஸனுக்கிராந்தனாய் அநேக இடங்களில் ஆட்களைவிட்டுத் தே
டியும் அவள் சென்ற இடம் தெரியவில்லை. அவளும் அகப்படவில்லை.
எவ்வளவோ பிரயாசை எடுத்தும் பயன்படாமற் போயிற்று. வேந்தன்
ஒன்றுந் தோன்றாது திகைத்துப் புலம்புவானாயினன்.

"எனதுயிர்க்குத் துணை யுனை யல்லாதிந்த வுலகமதி லில்லையென்ற
மனதிடத்தை யிழந்திடவெவ் விடமொளித்து நிற்கின்றாய் மங்கைநல்லாய்
புனிதமிகப் பெறுசுகுண மாலினியென்னும்பெயரைப் பொருந்தப்பெற்ற
வனிதையர் சிகாமணியே யெனைத்தனியில் விடுக்கமனம் வந்ததென்னோ!"

தொடர்ச்சியுண்டு.

## ஜனசார சீர்திருத்தக்காரர்கட் கோர் கடிதம்.

மேன்மை குணங்களால்நிறைவுற்ற நமது இந்தியாநாடானது மென்
மேலும் விருத்தி யடைந்து கொண்டு வருவதை நாம் கண்ணுறுகின்றோம.
சரித்திரங்களால் நாம் அறியப்பெற்ற, ஆயிரம் வருஷங் களுக்கு முன்னிரு
ந்த நமது நாட்டின் நிலைமையையும் இப்பொழுது இருக்கப் பெற்ற நிலைமை
யையும் உற்று நோக்குவோமே யாகில் வித்தியாசத்தை நன்கு அறியலாம்.

நூற்றுக் கணக்கான மைல்களுக் கப்பால் இருக்கப்பெற்ற ஒருமனித
னிடமிருந்து சமாசாரங்கள் அறிய விரும்பினால் ஒரு நிமிஷத்தில் அறியலா
ம். அவ்வண்ணமே நமது சமாசாரங்களையும் அவர்களுக்குத் தெரிவிக்கலாம்.
ஆறுமாதம்வேண்டியிருந்த பயணங்களையெல்லாம் ஒருவாரத்தில்செய்துமுடி
த்து விடலாம், வாணாளைக்கொடுத்துச் செய்யவேண்டிய ஸ்தலயாத்திரைதீர்
த்த யாத்திரைகளை எல்லாம் சிரமமன்னியில் செய்யலாம், இம்மாதிரியான
நன்மைகள் அநேகம் இருக்கின்றன. இதைக் காட்டிலும் அதிகம் நமது நாடு
விருத்தியடைய வேண்டுமென்று பலர்சிரமப்படுகிறார்கள். நாடுவிருத்தியடை
யநாட்டோர்க்ஷேமமாக இருக்கவேண்டுவது ஆவசிகமென்று அறியாதோர் இல்
லை. அதற்காகநாட்டோர்களது க்ஷேமத்தைக் கருதிப்பாடுபடுபவர்கள் அநேகர்
இருக்கின்றார்கள். அயலார்கள் விருத்தியடைவதையே தங்களுடையதாக எ
ண்ணி அவர்கள் சந்தோஷிக்கின்றார்கள். பிறர் துன்பப்படாதிருக்கப்பார்ப்ப
தே தங்கள் சந்தோஷமென்றெண்ணி அத்துன்பங்களை நீக்க அவர்கள் வழி
தேடுகிறார்கள். இவர்களது செயலை நோக்குங்கால் சந்தோஷத்தையடைந்தவ
ர்களாக ஆகின்றோம். மனக்கவலை யினின்றும் நீங்கினவர்களாகத் தோற்றுகி
ன்றோம். இவர்களுக்கு ஒவ்வொருவரும் வந்தன முடையவர்களாகவே இ
ருத்தல் வேண்டும். அதுதான் அவர்கள் செய்கின்ற உபகாரத்துக்குப் பிரதி
யுபகாரமாக நம்மால் செய்யக் கூடுவது. காலத்தில் நன்றி செய்யப்
புகுந்திருக்கின்றவர்கள். நமது நாட்டில் எவ்வளவு சீர்திருத்தங்கள் ஏற
பட்டிருந்த போதிலும் குறைகள் இல்லாது போகவில்லை. சிற்சில ஸ்திரீகளி
னது நிலைமை மனதுக்குமிக்க வருத்தத்தைக் கொடுக்கக்கூடியதாகவே இரு
க்கிறது. பொதுவாக நமது நாட்டுஸ்திரீகளினது நிலைமையே அவ்வண்ணந்
தான் இருக்கின்றது என்று அநேகர் சொல்லுகின்றார்களே யொழிய அதற்கு
வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறவர்களாகக் காணோம். மேற் கூறியவர்கள்
தான் ஏதோ ஸ்திரீகள் விஷயத்தில் இரக்கங்கொண்டு வருந்துகின்றவர்க
ளாகத் தெரிகின்றது, அன்னவர்கள், சங்கங்கள் கூடி ஸ்திரீகள் விருத்திய
டைய வேண்டிய மார்க்கங்களைப் பற்றிப் பேசுவதாகவும் தெரிகின்றது.

நமது இந்தியநாடோ இப்பொழுது பால்ய விதவைகளால் நிறைந்த நாடாக மாறிக்கொண்டு வருகின்றது. எல்லாவிஷயங்களிலும் சீர்திருத்த மடைந்திருப்பதுடன் நமது நாடு இவ்விஷயத்திலும் விருத்தியடைந்து கொண்டேவருகின்றது. காரணங்களைக் கண்டுபிடித்து நீக்க முயலினும் பயன்பட்டதாகவும் காணோம். பால்யவிதவைகளினது கஷ்டங்களை நீக்கக்கருதி எடுத்த முயற்சிகள் ஏதாயினும் முற்றுப் பெற்றதாகத் தெரியவில்லை. அதைப்பற்றி விசாரிக்க நாம் இங்குவரவில்லை. வேறு விஷயத்தைக் குறித்துத் தெரிவிக்க வந்திருப்பதால் மேற்கூறியசங்கதியை மற்றொருசமயத்துக்கு வைத்துக்கொள்வோம். இப்பொழுது சொல்லக் கருதுகின்ற விஷயம் ஒருவரும் அறியாததல்ல. எல்லோருக்கும் தெரிந்திருக்கக்கூடியதே. அப்படியிருக்க ஜனசார சீர்திருத்தக்காரர்களது கண்ணுக்குப்புலப்படாதிருப்பது மிக்க ஆச்சரியமே! அதுவும்அச்சிற் சிலஸ்திரீகளினது துர்ப்பாக்கியமென்றேசொல்லவேண்டும்.

புருஷனிருந்து மிறந்தவனே யென்று சொல்லக்கூடிய கணவர்கள் வாய்க்கப்பெற்ற ஸ்திரீகள் அநேகர் இருக்கின்றார்கள். சம்பாதித்துப் போட முடியாது வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும் புருஷர்களை யடைந்த ஸ்திரீகளைப்பற்றிச் சொல்ல வரவில்லை. வியாதியால் அவஸ்தைப்பட்டுக் கொண்டு வருந்துகின்ற கொழுநரைப் பெற்றிருக்கின்ற ஸ்திரீகளைப் பற்றிக் கூறவும் வரவில்லை, இவ்வண்ணம் எவ்விஷயம் இருப்பினும் அவ்விஷயத்தைப்பற்றிக்கூறவும்வரவில்லை. நான் சொல்லப்புகும் விஷயத்தைப்பற்றி நோக்குங்கால் இம்மாதிரி யிருக்கப் பெற்ற ஸ்திரீகளினது நிலைமையெல்லாம் சர்வசிலாக்கிய மென்று நினைக்க வேண்டிவரும். இவர்களது நிலைமையையும் நான் சொல்லப்புகும் பெண்பாலரின் நிலைமையையும் ஒத்துப்பார்க்குங்கால் மட்டும் இவ்வித்தியாசம் ஏற்படுமே யொழிய வேறு காலத்தில் புலப்படாது.

தான் விவாகம் செய்து கொண்டதின் பின்னர் விவாகம் செய்து கொண்டதாகவே ஞாபகம் இல்லாத பேர்களைக் கணவராகக் கொள்ளப் பெற்றிருக்கின்ற மாதர்களது நிலைமையைப்பற்றித் தான் நான் கூறவந்தது. ஞாபக மில்லாதவர்கள் என்று சொல்வதற்கும் இடமில்லை. ஞாபகமிருந்து செய்கிறவர்களாகவேதான் தோன்றுகிறது. அப்படி ஞாபகமற் றிருப்பவர்களை நமது நண்பர்கள் ஞாபகப் படுத்த முயலுவார்களென்று நம்புகிறேன். அப்படி ஞாபகப் படுத்துவதுடன் காரியம் சித்திபெறும் வண்ணம் கொஞ்சம் முயற்சியும் எடுத்துக் கொள்வார்களென் றெண்ணுகிறேன்.

(இன்னும் வரும்.) S. N. மீனாக்ஷியம்மாள்.

## இந்திரா. (முன்தொடர்ச்சி.)

ஜனங்கள் சொல்லிக்கொண்டதில் அவர் ஆங்கிலேய சேனைக்கு ஊண் உடையளிக்கும் இலாக்காவாகிய கமிசாரியெட் (Camesireate) என்பதில் வேலையாகி, அளவற்ற திரவியத்தைச் சம்பாதித்துக்கொண்டு வந்திருக்கிறாரென்பதை மாத்திரம் கேள்விப்பட்டேன். என்னுடைய மாமனார், எனது தந்தைக்குத் "தங்களுடைய மங்களாசீர்வாதத்தால் உபேந்திரன் (எனது கணவருடைய பெயர் உபேந்திரன்—பேரைச்சொல்லிவிட்டேன், பெரியவர்களான சுமங்கலிகள் நான் செய்த அபராதத்தைப் பொறுக்கவேண்டும். ஆனால் இக்காலவழக்கப்படி "என்னுடைய உபேந்திரா" வென்று அழைக்க வேண்டுமெனத் தோன்றுகிறது) தன் மனைவியையும் மற்றெல்லாரையும் பரிபாலிக்கும்படியான சக்தியையுடையவனாயிருக்கிறான். பல்லக்கு, ஸேவகிகள், போகிகள், மற்றும் வேண்டுவனவெல்லாம் அனுப்பியிருக்கிறேன்

சௌபாக்கியவதியை தயவுசெய்து அனுப்பவேணும், அப்படியில்லாவிட்டால், உத்திரவானால் பிள்ளைக்கு வேறே விவாகம்செய்யவேண்டும்." எனக்காகிதம் வரைந்து ஏவலாளருடன் அனுப்பினார். என்னுடைய தந்தையானவர் காகிதத்தைப்படித்ததும் தலையெடுத்துப்பார்த்து, "இவர் புதிதாய் பெரிய மனுஷரானவர்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டார். பல்லக்கின் உட்புரம்ஸுவர்ணநிர்மிதமானபட்டாடையினால்அலங்கரிக்கப்பட்டிருந்தது. மேற்புரம் சணையின் இருமுனைகளிலும் சிம்மத்தினுடையமுகங்கள் வெள்ளியினால் செய்து அமைக்கப்பட்டிருந்தது. அதனுடன் வந்திருந்த தாதி கழுத்தில் மிகவும் விலையுயர்ந்த ஸுவர்ணாபரணங்களை யணிந்திருந்தாள். இன்னும் இவளுடன் நான்கு புருடர்கள் வேண்டும் பணிவிடைகளைச் செய்வதற்கு வந்திருந்தார்கள். (இன்னும் வரும்.) T. V. கிருஷ்ணசாமி சாஸ்திரி.

**வர்த்தமானங்கள்:**--லார்ட் சர்ஸன் இராஜப்பிரதிநிதி ஸ்தானத்தையும் லார்ட் ஆம்தில் சென்னைக் கவர்னர் ஸ்தானத்தையும் ஒப்புக்கொண்டுவிட்டனர். காங்கிரஸும் பொருட்காட்சியும் மிககவிமரிசையாக நடந்தேறின. ஜப்பானியர் போர்ட் ஆர்தரை இன்னும் கைப்பற்றவில்லை. மலபாரில் வலைஞனொருவன் மீனைத்தூண்டிலிருந்து எடுக்கும்போது அது கடித்தது காரணமாக இறந்துபோயினனாம். அமெரிக்காவை யடுத்த சால்ட் லேக்கிலுள்ள ஜோஸப் ஸ்மித் என்பவனுக்கு 5 மனைவிகளும் 45 பிள்ளைகளும் 150 பேரப்பிள்ளைகளுமுளராம். ஜித்தாக்கடலில் 8 அடி நீளமும் 2½ அடி சுற்றளவும் பாதி மனுஷரூபமும் மறுபாதி மச்சரூபமும் கலந்துள்ள மீன் ஒன்று அகப்பட்டதாம். 1000௵ வரை கெட்டுப்போகாது ஓடத்தக்க கெடியாரமொன்றை ஜர்மெனியில் ஒருவன் செய்துளனாம். பம்பாய் பொருட்காக்ஷியில் 70000சாமான்கள் வைக்கப்பட்டிருந்ததாம்.

**சில அபிப்பிராயங்கள்:**—பிரஜானுகூலன். இது அநேக விநோத சரிதங்களையும் பொது நீதிகளையும் எளிய நடையில் இன்புறக்கூறும் திறம் வாய்ந்துளது. இந்து வர்த்தமானி. நாகப்பட்டணம்.

**புத்தகவரவு:**—"சன்னியாசி கீதம்" எனும் சிறப்பெயர் தரித்த சிறு நூலொன்றினை மகா-ா-ா-ஸ்ரீ M. கோபாலகிருஷ்ணையரவர்களிடமிருந்து வரப்பெற்றோம். ஸ்ரீவிவேகாநந்தஸ்வாமிகள் ஆங்கிலத்திலியற்றிய இக்கீதையை இனிய தமிழ் நடையில் மூலநூலின் கருத்தை முற்றிலும் தழுவி அகவல் ரூபமாக அச்சிட்டுதவியது மிகவும் ஸ்லாகிக்கத்தக்கதே. இதையனுப்பிய ஆசிரியரவர்கட்கு நமது வந்தனத்தைச்செலுத்துவோமாக.

மிஸ்டர் P. M. இராஜாமுதலியாரவர்களால் தயார் செய்யப்பட்டு நமது பார்வைக்கனுப்பப்பட்ட 1905-௵த்திய புலிப்பாக்கெட்பஞ்சாங்கம் ஒன்றை வந்தனத்துடன் பெற்றுக்கொண்டோம். இது ஜனங்கள் முக்கியமாய் அறிந்துகொள்ளவேண்டியதாயுள்ள உபயோககரமான அநேக விஷயங்களும், இங்கிலீஷ் தமிழ்பஞ்சாங்கமும், அடங்கியதாய் உயர்வானவெள்ளிய கடிதத்தில் மிகச்சுத்தமான எழுத்துகளால் பதிப்பிக்கப்பட்டு சிறந்தபைண்டுடன் இலங்குகின்றது. இவையன்றியும் 6 பாஷைகளில்தினக்குறிப்புகள் அச்சிடப்பட்டு பிரதிதினத்திற்கும் ஒவ்வொரு பக்கமும், வரவுசிலவு கணக்குகளும் ஞாபகக் குறிப்புகளும் எழுதுவதற்கு அச்சிடப்பட்டகாகிதங்கள் பலவும் விடப்பட்டுள்ளது. 1896-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு பத்து ஸம்வத்ஸரங்களாக பிரதி வருஷத்திலும் 5000 க்கு குறையாமல் 7000, 8000, வரையில் வெளியிட்டு வருவதும் இதின் அருமையையும் அவசியத்தினையும் நன்கு விளக்கும். ஆகவே நம் நாட்டார் இதனை ஆதரிப்பார்களாக.